

விபத்துக்குள்ளான லாரி– காரை படத்தில் காணலாம்.

விபத்தில் பலியான வக்கீல் தனஞ்செய ராமச்சந்திரன், போலீஸ்காரர் நவீன், ஸ்ரீதர் குமார், வாசு ராமநாதன்.

எட்டயபுரம் அருகே பயங்கர விபத்து:

லாரி- கார் மோதல்; வக்கீல் உள்பட 4 பேர் பலி

படுகாயமடைந்த நீதிபதிக்கு தீவிர சிகிச்சை

எட்டயபுரம், ஜூன்.13–

தஞ்சாவூர் மாவட்ட நீதிபதி பூரணஜெய ஆனந்த் தலைமையில் 6 பேர் திருச்செந்தூர் கோவிலுக்கு சாமி கும்பிட வந்தனர். அவர்கள் சாமி தரிசனம் செய்து விட்டு இன்று காலை தஞ்சாவூருக்கு காரில் புறப்பட்டனர்.

லாரி– கார் மோதல்

இவர்களது கார் தூத்துக்குடி – மதுரை சாலையில் எட்டயபுரம் அருகே மேலக்கரந்தை பகுதியில் சென்று கொண்டிருந்தது.

அப்போது அந்த சாலையில் தூத்துக்குடியில் இருந்து ஜிப்சம் ஏற்றிக் கொண்டு அரியலூருக்கு ஒரு லாரி சென்று கொண்டிருந்தது. மேலக்கரந்தை பகுதியில் கார் சென்றபோது எதிர்பாராதவிதமாக முன்னால் சென்ற லாரி மீது மோதியதாக கூறப்படுகிறது.

4 பேர் பலி

இந்த விபத்தில் காரில் இருந்த 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு விளாத்திகுளம் டி.எஸ்.பி. அசோகன் தலைமையில் மாசார்பட்டி போலீசார் விரைந்து சென்று படுகாயமடைந்த வர்களை மீட்டு அருப்புக் கோட்டை அரசு ஆஸ்பத்தி ரிக்கு அனுப்பி வைத்தனர். இதில் ஒருவர் வழியிலேயே இறந்தார். இதனால் விபத்தில் பலியான வர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்தது.

தொடர்ந்து பலியான வர்களின் உடல்களை மீட்டு போலீசார் விசா ரணை நடத்தினர். இதில் பலியானவர்கள் தஞ்சா வூரை சேர்ந்த வக்கீல் தனஞ்செய ராமச்சந்திரன், கார் டிரைவர் ஸ்ரீதர் குமார், கோர்ட்டு ஊழியர் வாசுராம நாதன் என்பதும், மற்றொரு வர் நீதிபதியின் பாதுகா வலராக வந்த போலீஸ்காரர் நவீன் குமார் என்பதும் தெரியவந்தது. விபத்தில் படுகாயமடைந்த நீதிபதி பூரண ஜெயஆனந்த், உதவி யாளர் உதயசூரியன் ஆகிய 2 பேர் அருப்புக்கோட்டை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தொடர்ந்து விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சைதை துரைசாமியின்

மனிதநேயம் மையத்தில் படித்த 71 பேர் வெற்றி

சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வு முடிவு வெளியீடு

சென்னை, ஜூன்.13–

979 காலிப் பணியிடங்க ளுக்கு நடந்த சிவில் சர்வீசஸ் பதவிக்கான முதல்நிலைத் தேர்வு முடிவு நேற்று வெளி யாகியுள்ளது. இதில் சைதை துரைசாமியின் மனித நேயம் பயிற்சி மையத் தில் படித்த 71 பேர் வெற்றி பெற்றிருக்கின் றனர்.



சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வு

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட சிவில் சர்வீ சஸ் பதவிகளில் ஒவ்வொரு ஆண்டும் காலிப் பணியிடங் கள் தொடர்பான அறி விப்பை வெளியிட்டு, அதற்கு தேர்வையும் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) நடத்துகிறது. முதல்நிலை, முதன்மை மற் றும் நேர்முகத் தேர்வு அடிப்ப டையில் இந்த பணியிடங்க ளுக்கு தகுதியானவர்களை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கிறது.

அந்தவகையில் 2025–ம் ஆண்டுக்கான காலிப் பணி யிடங்கள் குறித்த அறிவிப்பு கடந்த ஜனவரி மாதம் வெளி யானது. மொத்தம் 979 காலிப் பணியிடங்களுக்கு நாடு முழு வதும் ஏராளமானோர் விண் ணப்பித்திருந்தனர். அவர்க ளுக்கான தேர்வு கடந்த மாதம் (மே) 25–ந்தேதி நடந் தது. தேர்வு எழுதியவர்களுக் கான முடிவை தேர்வு நடந்து முடிந்த 18 நாட்களில் யு.பி. எஸ்.சி. வெளியிட்டுள்ளது.

71 பேர் வெற்றி

தேர்வு எழுதிய லட்சக்க ணக்கானவர்களில் 14 ஆயி ரத்து 156 பேர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று இருப்பதாக யு.பி.எஸ்.சி. தெரிவித்திருக்கிறது. தமிழ் நாட்டை சேர்ந்த 723 பேர் அதில் இடம்பெற்றிருப்பதாக சொல்லப்படும் நிலையில், இதில் சைதை துரைசாமியின் மனிதநேயம் பயிற்சி மையத் தில் படித்த 71 பேர் வெற்றி பெற்று இருக்கின்றனர்.

இதுதொடர்பாக மனித நேய அறக்கட்டளை தலைவர் சைதை துரைசாமி வெளியிட் டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள் ளிட்ட உயர் பதவிகளிலும், தமிழ்நாடு அரசு துறைகளில் உள்ள பணிகளிலும் அனைத்து தரப்பு மக்களும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் மனிதநேய அறக்கட்டளை தொடங்கப் பட்டு, அதன் மூலம் மேற் சொன்ன பணிகளுக்கான தேர்வுகளுக்கு பயிற்சி வழங் கப்படுகிறது. அந்தவ கையில் சிவில் சர்வீ சஸ் முதல்நிலைத் தேர் வுகளுக்கான பயிற்சி பெற்றவர்களில் 57 ஆண்கள், 14 பெண்கள் என மொத்தம் 71 பேர் வெற்றி பெற்று இருக் கிறார்கள்.

வெற்றிபெற்ற 71 பேரில் 16 பேர் 2 ஆண்டுகளாக இணையதளத்தின் வாயிலாக பதிவு செய்து படித்து வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள்.

தங்கும் வசதி, உணவு இலவசம்

இவர்கள் அனைவருக்கும் முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுக்கு தேவை யான நேரடி வகுப்புகள், தொடர் பயிற்சி தேர்வுகள், பாடக்குறிப்புகள், வல்லுனர் குழு ஆலோசனை மற்றும் ஏற்கனவே தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களின் ஆலோசனையும் வழங்கப்பட உள்ளது.

தேர்வில் வெற்றி பெற்ற வர்களுக்கு தகுதியின் அடிப்படையில் தங்குவதற்கு வசதியும், உணவும் இலவச மாக வழங்கப்பட்டு அனைத்து உதவிகளும் செய்து தரப் படும். இந்த பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் முதல்நிலைத் தேர்வுக்கான ஹால் டிக்கெட்டுடன் சென்னை சி.ஐ.டி. நகரில் உள்ள மனிதநேயம் ஐ.ஏ.எஸ். கட்டணமில்லா பயிற்சி மையத்தில் நேரிலோ, 044–24358373, 24330095, 9840439393, 8428431107 ஆகிய தொலைபேசி எண்கள் வாயிலாகவோ, www.mntf reeias.com என்ற இணையதளம் வாயிலாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான அடுத்தக்கட்ட முதன்மைத் தேர்வு வருகிற ஆகஸ்டு மாதம் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியை அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்த காட்சி.

பாளை வ.உ.சி. மைதானம் அருகே

ரூ.27 லட்சத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி

நெல்லை, ஜூன்.13–

நெல்லை மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் 32–வது வார்டு புதுப்பேட்டை வடக்கு தெரு சாலை பல வருடங்க ளாக சேதமடைந்து பொது மக்கள் நடக்க தகுதியற்ற நிலையில் இருந்தது.

அந்த சாலையை புதிய சாலையாக அமைத்து தர அந்த தெரு மக்கள் வார்டு கவுன்சிலர் அனுராதா சங்கரபாண்டியனிடம் கோரிக்கை விடுத்தனர். அதனைத் தொடர்ந்து கவுன்சிலரின் முழு முயற்சியில் புதுப்பேட்டை வடக்கு தெருவில் சாலை அமைப்பதற்கு ரூ.27 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தொடர்ந்து சாலை அமைப்பதற்கான பணிகளின் தொடக்க விழா இன்று நடைபெற்றது. விழாவிற்கு வார்டு கவுன்சிலர் அனுராதா சங்கரபாண்டியன் தலைமை தாங்கினார். நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் அப்துல் வகாப் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு புதுப்பேட்டை வடக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜூ, மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சங்கர பாண்டியன், மாநகராட்சி பொறியாளர் முருகன், சபை உறுப்பி னர்கள் துரைமுருகன், ராமகிருஷ்ணன், அருள்ராஜ், தங்கராஜ், ஊர் தலைவர்கள் நம்பிராஜன், சண்முக சுந்தரம், கணேசன், உலக நாதன், ஆறுமுகம், காங்கிரஸ் சேவா தளம் அனீஸ், மாவட்ட காங்கிரஸ் துணை தலைவர் வெள்ளை பாண்டி, மாவட்ட செயலாளர் சின்ன பாண்டி, மண்டல தலைவர் ரசூல் மைதீன், நிர்வாகிகள் அலெக்ஸ், ஜான், முத்து ராமலிங்கம், தி.மு.க. வட்ட செயலாளர் கதிரேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மாவட்ட செயலாளர் தச்சை கணேசராஜா முன்னிலையில் அ.தி.மு.க.வில் இணைத்து கொண்டனர்.

அ.தி.மு.க.வில் இணைந்த இளைஞர்கள்

நெல்லை, ஜூன்.13–

நெல்லை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் தச்சை கணேசராஜா முன்னிலையில் மாநகர் மாவட்ட மாணவரணி செயலாளர் முத்துப்பாண்டி ஏற்பாட்டில் சுமார் 25–க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தங்களை அ.தி.மு.க.வில் இணைத்து கொண்டனர்.

மாநகர் மாவட்ட அலுவலகத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள் சிந்து முருகன், சண்முககுமார், மாவட்ட விவசாய பிரிவு செயலாளர் காளி முருகன், மாவட்ட மாணவரணி தலைவர் விக்னேஷ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கமலேஷ் பாண்டியன், வட்டச் செயலாளர்கள் பழைய பேட்டை கணேஷ், பாறையடி மணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெல்லையில் இருந்து கோவை சென்ற

அரசு பஸ்சுக்குள் மது குடித்துவிட்டு ரகளை செய்த வாலிபர்

அதிகாலை நேரத்தில் பயணிகள் தவிப்பு

கோவை, ஜூன்.13–

நெல்லையில் இருந்து கோவைக்கு நேற்று இரவு ஒரு அரசு பஸ் புறப்பட்டது. அந்த பஸ்சில் 50 பயணிகள் இருந்தனர். அதிகாலையில் இந்த பஸ் மதுரை டோல்கேட்டை தாண்டி வந்து கொண்டிருந்தது.

அரசு பஸ்சுக்குள் மது குடித்த வாலிபர் கண்டக்டருடன் தகராறில் ஈடுபடுவதையும், அதனை மற்ற பயணிகள் வேடிக்கை பார்ப்பதையும் படத்தில் காணலாம்.

மது அருந்திய வாலிபர்

அப்போது பஸ்சின் பின் இருக்கையில் அமர்ந்துஇருந்த40வயது வாலிபர், பயணிகள் தூங்கி விட்டதாக நினைத்து தான் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுவை எடுத்து குடித்தார்.

பஸ்சுக்குள் மது வாடை வீசவே, அருகே தூங்கி கொண்டிருந்த பயணிகள் திடுக்கிட்டு விழித்து பார்த்தனர். அப்போது பஸ்சுக்குள் வாலிபர் மது குடித்து கொண்டிருந்ததை கண்டு அதிர்ச்சியாகினர்.

உடனே பயணிகள் அந்த வாலிபரிடம், பஸ்சில் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது நியாயமா? என அந்த வாலிபரிடம் கேட்டனர். ஆனால் அந்த வாலிபர் எதையும் கண்டு கொள்ளாமல் பஸ்சில் இருந்த பயணிகளுடன் தகராறில் ஈடுபட்டார். இதனால் பஸ்சுக்குள் இருந்த மற்ற பயணிகள் தூங்க முடியாமல் தவித்தனர்.

கண்டக்டருடன் தகராறு

இதுகுறித்து தகவலறிந்த கண்டக்டர் வாலிபரிடம் சென்றுஉடனடியாகபஸ்சில் இருந்து இறங்கும்படி கூறினார். ஆனால் அந்த நபர் இறங்க முடியாது என்று கூறியதுடன், பஸ்சின் பின்புற வாசல் படிக்கட்டில் அமர்ந்து தொடர் ரகளையில் ஈடுபட்டார்.

இதற்கிடையே அதிகாலை நேரத்தில் குடிமகனை பஸ்சில் இருந்து இறக்கி விட்டால் அவரது நிலைமை பரிதாபமாகி விடும் என்பதால் சிலர் அவரை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டனர். ஆனாலும் வாலிபர் சண்டை போடுவதை நிறுத்தவில்லை.

தூக்கத்தை தொலைத்த பயணிகள்

இதற்கிடையே பஸ்சில் பயணம் செய்த ஒரு போலீஸ்காரர், பஸ்சுக்குள் செல்கிறாயா? அல்லது ஜெயிலுக்கு போகிறாயா என்று சத்தம் போட்டார்.

அதன்பிறகு அந்த வாலிபர் இருக்கையில் அமர்ந்து தூங்க தொடங்கி விட்டார். பின்னர் கோவை காந்திபுரம் பஸ் நிலையம் வந்ததும் பயணிகள் அனை வரும் இறங்கினர்.

அப்போது வாலிபரும் வேக, வேகமாக இறங்கினார். அவரை பார்த்த பயணிகள் சிலர் இரவு எல்லாம் ரகளை செய்து எங்களது தூக்கத்தை தொலைத்து விட்டாயே என அவரை திட்டி தீர்த்தனர். ஆனால் வாலிபர் எதையும் கண்டு கொள்ளாமல் வேக, வேகமாக அங்கிருந்து ஓடி விட்டார்.

அதிகாலை நேரத்தில் அரசு பஸ்சில் பயணித்த வாலிபர் மது குடித்துவிட்டு ரகளையில் ஈடுபட்ட சம்பவம் பயணிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

நெல்லை வழியாக சென்ற

உடன்குடி- ஈரோடு அரசு விரைவு பஸ்சை மீண்டும் இயக்க வேண்டும்

கிராம மக்கள் கோரிக்கை

உடன்குடி, ஜூன்.13–

உடன்குடி பஸ்நிலையத்தில் இருந்துதினசரி மாலை 5.20–க்கு புறப்பட்ட தடம் எண் 624 என்ற ஈரோடு விரைவுஅரசு பஸ், முதலூர் சாத்தான்குளம், நெல்லை, மதுரை வழியாக பல ஆண்டுகளாக இயங்கி வந்தது. உடன்குடியில் இருந்து நெல்லை வரை சுமார் 200–க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தது.

ஏராளமான பயணிகள் இந்த பஸ்சை நம்பியே பயணம் செய்தனர்.சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இந்த பஸ் திடீர் என்று நிறுத்தப்பட்டது. இந்நிலையில் உடன்குடி– சாத்தான்குளம் பகுதியில் உள்ள பல்வேறு வியாபாரிகள் விவசாயிகள். சமூகநல அமைப்புகள் சார்பில் நிறுத்தப்பட்ட ஈரோடு பஸ்சை மீண்டும் இயக்க வேண்டும் என்று பல முறை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை மனுக்கெடுத்தும் இந்த பஸ் மீண்டும் இயக்கபடவில்லை.

இந்த பஸ்சை நம்பி பயணம் செய்த கிராம மக்கள் திருச்செந்தூர், தூத்துக்குடி, நெல்லை சென்று மாறி மாறிசெல்லும் அவல நிலையில் உள்ளனர். எனவே நிறுத்தப்பட்ட ஈரோடு அரசு விரைவு பஸ்சை பழைய நேரப்படி பழைய வழிதடத்தில் இயக்க கிராம மக்கள் 100–க்கும் மேற்பட்டோர் கையப்பம் இட்டு மீண்டும் சம்மந்தப்பட்ட அதிகாரிக்களுக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர்.

நாரதர் நகர்வலம்

பயணிகள் நிழற்குடையை சுற்றி செடிகள் வளர்ந்து புதர் மண்டி காட்சியளிப்பதை படத்தில் காணலாம்.

பாளை அண்ணாநகரில்

புதர் மண்டி காட்சியளிக்கும் பயணிகள் நிழற்குடை

விஷ பூச்சிகளின் நடமாட்டத்தால் பயணிகள் அச்சம்

நெல்லை, ஜூன்.13–

நெல்லையில் பஸ்சில் பயணம் செய்வோர் பயன்படுத்தும் வகையில் பல்வேறு இடங்களில் பஸ் நிறுத்தங்கள் உள்ளன. பெரும்பாலான இடங்களில் பயணிகள் நிழற்குடைகள் உள்ளன. ஒரு சில இடங்களில் நிழற்குடைகள் இல்லை.

இந்நிலையில் பாளையங்கோட்டை பஸ் நிலையம், அண்ணா நகர் நிறுத்தம் வழியாக தினமும் 100–க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பஸ்கள் நின்று செல்கின்றன. இந்த நிறுத்தத்திற்கு அடுத்த நிறுத்தத்தில் பாளை அரசு ஆஸ்பத்திரி உள்ளது. எனவே நெல்லை மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான நோயாளிகள், இப்பகுதியை சேர்ந்தவர்கள் இந்த மார்க்கமாக செல்லும் பஸ்களை பயன்படுத்து கின்றனர். ஆனால் இவ்வழியாக செல்லும் பஸ்கள் சரியான பஸ் நிறுத்தத்தில் நிற்காமல் நிறுத்தத்திற்கு முன்னதாகவோ அல்லது நிறுத்தத்தை தாண்டியோ நின்று பயணிகளை ஏற்றவும், இறக்கவும் செய்கின்றன. இதனால் பயணிகள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். வாகன ஓட்டிகளும் அவதிப்படுகின்றனர்.

இதனிடையே அண்ணா நகர் பயணிகள் நிழற்குடை நீண்ட நாட்களாக பயணிகளால் பயன்படுத்த படாமல் உள்ளது. இந்த பஸ் நிறுத்த நிழற்குடையில் சேதம் ஏற்பட்டு செடிகள் முளைத்து புதர் மண்டி காட்சியளிக்கிறது. இதில் இருந்து விஷ பூச்சிகள் அவ்வப்போது வந்து செல்கிறது. இதனால் பயணிகள் அச்சத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும் அங்கு சில இருக்கைகள் உடைந்து சேதமடைந்துள்ளன. அவற்றை சீரமைக்காமல் இருப்பதால், பயணிகள் அவதியடைகின்றனர்.

எனவே சம்பந்தப் பட்ட துறை அதிகாரிகள் இதை கண்காணித்து, பயணிகள் நிழற்குடையை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள், பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
திருவண்ணாமலை மாவட்டம்
கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம்
15-வது நிதிக்குழு மான்யம் - 2025-26

மேக்களூர் ஊராட்சியில் புதிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணி.

(மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை

அவர்களின் நிர்வாக அனுமதி செ.மு.எண்: 2200/2025/அ6, நாள்: 30.05.2025)

கோப்பு எண். 2051/2024/வ.அ3 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்:10.06.2025

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்கின்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)–ஆல் 15வது நிதிக்குழு மான்யம் கீழ் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேக்களூர் ஊராட்சியில் புதிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணிக்கு (சிப்பத்தின் அதிகபட்ச மதிப்பீடு தொகை ரூ.78.20/– இலட்சம்) மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான மின்ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில் இலவசமாக 12.06.2025 முதல் 20.06.2025 வரைபிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்:

(i)	மின் ஒப்பந்தபுள்ளி பதிவிறக்கம் செய்ய ஆரம்ப நாள் மற்றும் நேரம்	12.06.2025 முதல்
(ii)	மின் ஒப்பந்தபுள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	20.06.2025 முதல் மாலை 3.00 மணி வரை
(iii)	மின் ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	20.06.2025 மாலை 4.00 மணி முதல்

செ.மு.தொ.இ.3006/ஒப்பந்தப்புள்ளி/2025 — **வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), கீழ்பென்னாத்தூர்**

VTM லிமிடெட்

CIN L17111TN1946PLC003270

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு – 626003

தொலைபேசி: 91-452-2482595 & 2596, 7397733144 தொலைநகல் : 91-452-2482590

பங்குதாரர்களுக்கான அறிக்கை

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை கருத்தில் கொண்டு, செக்யூரிட்டீஸ் மற்றும் எக்ஸ்சேஞ்ச் போர்டின் (பட்டியலிடும் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015-ன்படி, 29 மே 2025 தேதிய தீர்மானங்கள் மூலம் தபால் வாக்கு, மின்னணு முறையில் வாக்களிக்க உறுப்பினர்களின் ஒப்புதலை கோரியுள்ளது.

உறுப்பினர்களின் ஒப்புதலைக் கோரி பங்குதாரர்களிடம் இருந்து பெறப்பட்ட மற்றும் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு 6 ஜூன் 2025 'கட்ஆப் தேதி' அன்று உறுப்பினர் பதிவேட்டில் / நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் 10 ஜூன் 2025அன்று மின்னணு முறையில் தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பை நிறுவனம் அனுப்பியுள்ளது. தபால்வாக்குச்சீட்டு அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.vtmill.com முறையே www.bse.com மற்றும் https://evoting.kfintech.com-களில் கிடைக்கும். நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் தபால் வாக்கு மின்னணு வாக்குப்பதிவை நடத்தும் ஆய்வாளராக தீரு. ந. ராமலிங்கம் CP:23495 பயிற்சி நிறுவன செயலாளர் அவர்களை கம்பெனியின் இயக்குநர்கள் குழு நியமித்துள்ளது. MCA சுற்றறிக்கைகள் மற்றும் சட்டத்தின் கீழ் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில், உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் மட்டுமே வாக்களிக்க முடியும். நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான (RTA) KFin Technologies Ltd.- உடன் நிறுவனம் இணைந்து, தபால் வாக்கெடுப்பிற்கு தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்குகிறது. கட்ஆப் தேதியின்படி உறுப்பினர்களின் பதிவேடு பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்கள் மின்னணு வாக்குப்பதிவின் நோக்கத்திற்கு மட்டுமே கருதப்படுவார்கள். மற்றவர்கள் இதை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே கவனத்தில் கொள்ளுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கம்பெனி 10.06.2025 அன்று பங்குதாரர்களுக்கு (78ம் AGM-க்கு நோட்டீசு மற்றும் வருடாந்திர அறிக்கையை அனுப்பியுள்ளது (e-Copies உட்பட).

மின்னணு வாக்களிப்பு காலம் 24 ஜூன் 2025 அன்று (காலை 9.00 மணி)தொடங்கி 01 ஜூலை 2025 (மாலை 5.00 மணிக்குள்ளாக) முடிவடைகிறது. மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் மின்னணு போர்டல் முடக்கப்படுவதால் வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது. தபால் வாக்கு, மின்னணு வாக்குப்பதிவுகளின் முடிவுகள் 02 ஜூலை 2025 அன்று அறிவிக்கப்பட்டு பங்குச்சந்தையிலும் (BSE) முடிவுகள் அறிவிக்கப்படும் (www.vtmill.com) நிறுவனத்தின் இணையதளத்திலும் முடிவுகளை காணலாம். மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால் உறுப்பினர்கள் மின்னணு வாக்களிக்க RTA இணையதளம் https://evoting.kfintech.com-ன் பதிவிறக்க பிரிவில் உள்ள "Help" மற்றும் "FAQ" பிரிவுகள் பயனர் கையேட்டை பார்க்கவும்.

இடம் : விருதுநகர்.

தேதி : 10.06.2025

VTM லிமிடெட்டிற்காக,
கா.பிரியதர்ஷினி
நிறுவன செயலாளர்